Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# செப்பேடுகள் நாணயங்கள் கல்வெட்டுக்களில் கட்டிடக்கலை தொழில் நுட்பம்

முனைவர் : மா. ரமேஷ்பாபு, மிருதங்க ஆசிரியர்,
மகாத்மா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
மதுரை.

39

**ஆய்வின் நோக்கம்:**

செப்பேடுகள் நாணயங்கள் மற்றும் கல்வெட்டுகளில் கட்டிடக்கலையின் தொழில்நுட்பத்தை பற்றி நான் தெரிந்து கொள்வதுடனும் மேலும் இதை ஆய்வுக்கட்டுரையாக எழுதுவதன் மூலம் இது போன்ற இந்த துறையில் பல ஆய்வுகள் செய்வதற்கும் பல கட்டுரைகள் எழுதுவதற்கும் இதன்மூலம் அடுத்த தலைமுறையினருக்கு இதை கொண்டு செல்வதற்கு பயனுள்ளதாக இருக்கும் என்பது இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு சுருக்கம்:-**

செப்பேடுகள் எந்த நூற்றாண்டின் தொடங்கியது என்றும் பல்லவர் காலங்களிலும் அதற்கு பின்பு வந்த மன்னர்கள் மற்றும் அந்த மன்னர்களின் விவரங்களை பற்றி செப்பேடுகளில் குறிப்பிட்டு இருப்பது பற்றியும் மற்றும் சைவ வைணவ மடங்களில் உள்ள செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை பற்றியும் கொடுத்துள்ளேன். பிறகு நாணயங்கள் பற்றிய விவரங்களையும் கொடுத்துள்ளேன். பின்பு கல்வெட்டுக்களில் உள்ள கட்டிடக்கலையைப் பற்றி பல்லவர் காலத்திலிருந்து சேர சோழ பாண்டியர்கள் மற்றும் நாயக்க மன்னர்கள் காலம் வரை கட்டிடக்கலையை பற்றி விரிவாக கூறியுள்ளேன்.

**திறவுச்சொற்கள்:**

செப்பேடுகள்,

நாணயங்கள்

கல்வெட்டுக்களில் கட்டிடக்கலை தொழில் நுட்பம்

கற்றளிகள்

**முன்னுரை:-**

தமிழக வரலாற்று உணர்வு என்பது இன்றைக்கு நிறைய தமிழ் ஆர்வலர்களிடமும் மற்றும் ஆய்வாளர்களிடமும் நாடெங்கும் உள்ள தமிழ் பற்று உள்ளவர்களிடமும் இதைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இன்று பெருகிவருகிறது. ஆனால் தொல்லியல் என்பது ஒரு சிலரிடம் மட்டுமே இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த நிலைமாறி பலரும் இதை பற்றி தெரிந்து கொள்ளும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வரலாற்று ஆய்வு மையங்களும் தமிழக தொல்லியல் கழகம் போன்ற நாடு தழுவிய நிறுவனங்களளும் இவ்வுணர்வானது வளர்ந்து

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

வருகின்றன. தமிழக வரலாற்றை எழுதுவதற்கு அடிப்படை ஆவணங்களாக இருப்பவை கல்வெட்டுக்கள் அவை பிராமி, வட்டெழுத்து கிரந்தம் தமிழ் என நான்கு வகை எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன இதை போன்ற எழுத்துக்களையும் கல்வெட்டுக்களையும் அறிவதற்கு தொல்லெழுத்தியல் அறிவு தேவை. இதை பற்றி தெரிந்து கொள்வதற்கு இன்றைய நிலையில் நூல்கள் குறைவாக இருந்தாலும் கல்வெட்டியல் பற்றி இதன் முன்னோடிகளான திரு சி. சிவராமமூர்த்தி, திரு. டி.என் சுப்பிரமணியம் ஆகியோர் நூல்களை வெளியிட்டுள்ளனர், அது போல கல்வெட்டு மட்டுமின்றி செப்பேடுகள் மற்றும் பழங்காலத்து நாணயங்கள் மற்றும் கல்வெட்டு கட்டிடக்கலையும் இன்று பல்வேறு வகையில் படிப்படியாக அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு நூல்கள் வழியாகவும் இன்று வளர்ந்து வந்துள்ள ஊடகங்கள் வாயிலாகவும் இக்காலத்தில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வளர்ந்து வந்துள்ளது என்பதை இதன் மூலம் அறியலாம்.

**உப தலைப்புகள்:**

**செப்பேடுகள்:**

தமிழக வரலாற்றில் சங்க காலத்திற்குப் பின் அடுத்து வருவது பல்லவர் காலம் என்று கூறலாம். இந்த பல்லவர்களுடைய காலம் என்பது கி.பி. 3-ம் நூர்றாண்டு முதல் 9-ம் நூர்றாண்டு வரை இருந்தது. பல்லவர்களுடைய காலத்தில் வெளியிடப்பட்ட செப்பேடுகளில் காணப்படும் மொழியை வைத்து தான் அவர்களுடைய வரலாற்றை 3 பகுதிகளாக பிரித்து காணலாம். இவர்களுடைய காலத்தில் சிலர் பிராக்ருத மொழியை கையாண்டுள்ளனர். சில பல்லவர்கள் வடமொழியை கையாண்டுள்ளனர் மேலும் சிலர் வடமொழியும் தமிழையும் கலந்து செப்பேடுகளில் கையாண்டுள்ளனர். இதில் நமக்கு ப்ராக்ருத மொழியில் கிடைத்த செப்பேடுகள் 3 ஆகும். அதன்பிறகு வடமொழியில் 15 செப்பேடுகளும் பிற்காலத்தில் வடமொழியும் தமிழும் கலந்து எழுதப்பெற்ற செப்பேடுகள் 10-ம் நமக்கு கிடைத்தன. பொதுவாக செப்பேடுகள் என்பது அந்த காலத்தில் வரலாற்றை எழுதுவதற்கு பயன்படும் மூல ஆவணமாகும். முதலில் அரச ஆணை என்பது ஓலையில் தான் எழுதப்பெற்றது. பிறகு அது நிலைத்து இருப்பதற்காகவும் பிற்காலத்தில் பிறர் அறிவதற்கு வசதியாகவும் அது கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டன அந்த காலத்தில் ஓலையின் பிரதிகளாக இந்த செப்பேடுகள் இருந்து வந்தன.

ஓலைகள் போன்றே செப்பேடுகளிலும் அதன் இடது ஓரப்பகுதியில் துளையிட்டு ஒன்றுக்கு மேற்பட்ட செப்பேடுகளை ஒரு தடித்த செம்பு கம்பி மூலம் சேர்த்து அவ்வளையத்தின் இரு முனைகளையும் சேர்த்து பாதுகாத்து வைத்துள்ளனர். பல செப்பேடுகளை ஒன்றாக கோர்க்கும் போது ஒவ்வொரு செப்பேட்டின் ஓரங்கள் தடிமனாக்கப்பட்டன. அப்போது தான் இவை ஒன்றுக்கொன்று உராயும் போது எழுத்துக்கள் சிதைவு ஏற்படாமல் இருக்கும். இந்த செப்பேடுகளின் அமைப்பும் உள்ளடக்கமும் கல்வெட்டுக்களை போன்றே அமைந்து காணப்படும். செப்பேடுகளின் தொடக்கத்தில் மங்கல சொற்களும் பின்னர் கொடை வழங்கும் மன்னரின் குடிவழி பெருமையும் பின் கொடுக்கப்படும் கொடையின் விபரம் கொடை பெறுபவரின் பெயர் விவரம் வழங்கப்பட்ட நிலங்களின் எல்லைகளும்

இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். அதன் பின்பு இந்த ஆவணத்தை எழுத ஏற்பாடு செய்த அதிகாரியின் பெயரும் இதில் கொடுக்கப்பட்டிருக்கும். பின்பு பொறித்த ஆசாரி கவிதை நடையில் எழுதி கொடுத்த மத்யஸ்தன் அல்லது கணக்கன் ஆகியோரது விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கும் இறுதியாக ஒம்படைக்கிளவி என்னும் காப்பு செய்யுளும் இதில் தரப்பட்டிருக்கும். தமிழகத்தை பொறுத்தவரை பல்லவ, பாண்டிய சோழ மன்னர்களின் செப்பேடுகளை தவிர்த்து பிற்காலங்களில் நாயக்க மன்னர்களின் செப்பேடுகளும் நமக்கு கிடைக்கப்பெற்றன. அதன் பிறகு பிற்காலத்தில் சேதுபதிகள் மராத்திய மன்னர்கள் போன்றோர்களது செப்பேடுகளும் தொகுக்கப்பட்டன. அதன் பிறகு மடங்கள் உருவாக்கிய செய்திகள் அடங்கிய செப்பேடுகளும் அவர்களது கோவில் முதல் மரியாதை உரிமைகள் பற்றிய செய்திகளும் பல செப்பேடுகளில் காணப்படுகின்றன. அதன் பிறகு பிற்காலத்தில் பலரும் தங்கள் தேவைக்கு ஏற்ப செப்பேடுகளை தயாரித்து வைத்து கொண்டனர்.

**நாணயங்கள்:**

பல்லவ காசுகள் செம்பாலும், வெள்ளியாலும், பொன்னாலும் செய்யப்பட்டவை. அவற்றின் காலம் கி.பி. 7ம் நூற்றாண்டிலிருந்து காணலாம். நண்டு, ஆமை கப்பல் முதலியன பொறிக்கப்பட்ட காசுகள் பல்லவரது கடல் வாணிபச் சிறப்பைக் குறிப்பன ஆகலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். பல்லவர் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் பொன் காசுகள் இருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. பொன் என்பது ஒரு காசின் பெயர் பழங்காசு என்பது ஒரு சிறந்த வேலைப்பாட்டுடன் அமைந்தவை ஆகும். இதில் துளைபொன் என்பது துளையிடப்பட்ட பொற்காசு விடேல்விடுகு – துளையிட்ட செம்பொன் என்பது துளையிடப்பட்ட விடேல்விடுகு முத்திரை பெற்ற காசாகும். கழஞ்ச காசு என்பது ஒரு கழஞ்ச எடையுள்ள பொற்காசு ஆகும்.

**கல்வெட்டுக்களில் கட்டிடக்கலை தொழில் நுட்பம்:**

தமிழ்நாட்டில் 6-ம் நூற்றாண்டுக்கு பின்னரே கற்களால் கட்டடங்கள் கட்டப்பட்டன. இக்கட்டடக்கலையில் பெரும் பாலானவை கோயில்கள் ஆகும். 6-ம் நூற்றாண்டில் தொடங்கிய கற்க்கட்டடக்கலை நாயக்கர் காலம் வரை வளர்ந்து வந்துள்ளது.

**கற்றளிகள்:**

கி.பி. 7.ம் நூற்றாண்டின் இறுதியில் அரசாண்ட 2.ம் நரசிம்மவர்மன் ஆன இராஜசிம்மன் காலத்தில் தான் இந்த கற்றளிகள் அமைக்கும் முறை காணப்பட்டது. கற்றளிகள் என்றால் கற்கோவில்கள் என்பது பொருள். சுண்ணம் சேர்க்காமலேயே இந்த கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. செங்கலால் கட்டப்பட்ட கோவில்களை விட இந்த கற்றளிகள் பல ஆண்டுகளாக நிலைத்து இருப்பவை. இராஜசிம்மேச்சரம் என்னும் கற்றளியும் பணமலை என்னும் ஊரிலுள்ள கற்கோயிலும் முதன்முதலாக அமைக்கப்பட்ட கற்றளிகள் ஆகும். கி.பி. 10.ம் நூற்றாண்டில் சோழர்கள் பல்லவ மன்னர்கள்களை வென்று நாட்டை கைப்பற்றினர். இந்த சோழ மன்னர்கள் அதன் பிறகு புதிதாக நிறைய கோவில்களை கற்றளிகளாக கட்டி முடித்தனர். தமிழ்நாட்டு கோவில்களிலும் பல்லவர் காலத்து கோயில் பிற்கால சோழர்கள் காலத்து கோயில்கள் பாண்டியர் காலத்து கோயில்கள் விஜய நகர

அரசர் காலத்து கோயில்கள் என்று பல உட்பிரிவுகள் உண்டு. அந்த பிரிவுகளை தூண்கள் மற்றும் கூம்புகள் முதலிய அமைப்புகளிருந்து கண்டுகொள்ளலாம். அந்த கால சிற்பிகளது கூர்ந்த அறிவு வியத்தற்குரியது. அந்த காலத்தில் மகேந்திரன் குகை கோவில்களை அமைத்தான். அவனை பின்பற்றி நரசிம்மவர்மன் தன் பெயரை உலகிற்கு நிலைநாட்ட ஒரு கல்லையே கோவிலாக அமைக்கும் புதிய வேலையில் இறங்கி பெரு வெற்றி பெற்றான். அந்த காலத்தில் மரத்தாலும் மண்ணாலும் செய்யப்பட்ட கோவில்களில் பல வேலைப்பாடுகள் இருந்தன. அவை இந்த கற்கோவிலில் அப்படியே காணகிடைக்கின்றன. மர வேலைகள் எல்லாம் அப்படியே கல்லில் செதுக்கி ஒரு புதுமையை படைத்தான். இது போல பல மன்னர்கள் தமிழகத்தில் வேலைபாடுடன் கூடிய பல கோவில்களை கட்டி புதுமை படைத்துள்ளனர். இது போல தஞ்சை பெரிய கோவில், மாமல்லபுரம் போன்ற கோவில்களிலெல்லாம் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளோடு அன்றைய காலத்தில் உருவாக்கியுள்ளனர் என்பது வியப்பிற்குரியது. கோவில்களில் மிக உயரமான விமானத்தை உடையது தஞ்சாவூர் பெரிய கோவில் ஆகும். இதை இராஜ ராஜ சோழன் கி.பி. 1000.ல் கட்டினான். இது 190 அடி உயரம் கொண்டது. இதே போல அமைப்பு உடையது கங்கை கொண்ட சோழ புரத்தில் உள்ள கோயில் இது 1025 - ல் கட்டப்பட்டது. மற்றொரு உயரமான கோவில் திரிபுவனத்து கம்பகரேஸ்வர் கோயில் இவை சோழர்காலத்தில் கட்டப்பட்டன. இவையே மிக உயரமான கோவில்கள் அதற்கு பின் வந்த கோவில்கள் இவ்வளவு உயரமாக கட்டப்படவில்லை. பொதுவாக கட்டிட அமைப்பு பற்றியும் அவற்றின் உறுப்புகளை பற்றியும் ஆகம நூல்களிலும் சிற்ப சாஸ்த்திரகளிலும் விரிவாக கூறப்பட்டுள்ளது. பொதுவாக கோவில் கட்டிடத்தில் 6 உறுப்புக்கள் உண்டு அவை 1. அடி 2. உடல் 3. தோள் 4. கழுத்து 5. தலை 6. அடி

இந்த பெயர்களுக்கு சிற்ப நூலில் வேறு பெயர்கள் கூறப்படுகின்றன. அவை 1. அதிஷ்டானம் 2. பாதம் 3. மஞ்சம் 4. கண்டம் 5. பண்டிகை 6. ஸ்தூபி என்று கூறப்பட்டுள்ளது.

அதே போல கோவில் கட்டிடத்தில் அமைய வேண்டிய இந்த 6 உறுப்புகளுக்கும் சில அளவுகள் உள்ளன. இவை அந்த அளவுகளில் தான் அமைய வேண்டும். அது போல மதுரையில் அமைத்திருக்கும் மீனாட்சியம்மன் கோவில். இந்த கோயிலின் சித்திர கோபுரம் என்று அழைக்கப்படும் மீனாட்சி மண்டபத்தினின்று கோவிலுக்குள் நுழையும் வாயிலில் 7 நிலைகளையுடைய கோபுரம் அமைத்திருக்கிறது. அம்மன் கோவிலுக்கு எதிரே அமைத்துள்ள கோபுரங்களில் இதுவே உயர்த்த கோபுரம் இந்த கோபுரம் 117 அடி உயரமும் 38 அடி அகலமும் 78 அடி நீளமும் உடைய அடித்தளமும் கொண்டதாகும். இந்த கோபுரத்தில் 730 அழகு மிக்க சுதையாலான சிற்பங்கள் இடம் பெற்றிருப்பதால் இது சித்திர கோபுரம் என்று

அழைக்கப்படுகிறது. நமது இந்து சமயத்தில் பல்வேறு கட்டிடக்கலைகள் இருந்தாலும் அவை அனைத்திற்கும் ஒற்றுமை உள்ளது. பொதுவாக ஒரு கோவில் என்றால் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் திருச்சுற்று மாளிகைகோபுரம் என்று பொதுவான அமைப்பு முறை இருப்பது போல அன்றைய கால மன்னர்களுடைய கல்வெட்டுகள் மற்றும் செப்புப்பட்டய ஆவணங்களில் ஒரு

குறிப்பிட்ட அமைப்பு முறையிலேயே செய்திகள் அனைத்தும் பரவலாக பொறிக்கப்பட்டுள்ளமையை பல கல்வெட்டுகளில் நாம் காணமுடிகிறது. இவ்வாறாக பல்லவர் காலத்திலிருந்து நாயக்க மன்னர்கள் மற்றும் இன்று வரை இந்த கல்வெட்டு கட்டிடக்கலை சிறந்த விளங்கி வருகிறது.

**முடிவுரை:**

பல்லவர் காலத்து கோவில்களின் அமைப்பு முறை தமிழ் நாட்டு குடிசை கோவிலிருந்து உண்டானதென்றால் அது மிகையாகாது. தென்னாட்டு கட்டிடக்கலை அது தமிழகத்திற்கே உரியது. இன்று காணப்படும். வானளாவிய கோபுரங்கள் விமானங்கள் இவற்றில் காணப்படும் வேலைகள் அனைத்தும் பழைய வேலைப்பாடுகளிலிருந்து வளர்ச்சி பெற்றவையே இந்த வளர்ச்சி பல நூற்றாண்டுகளாக உண்டானவை இதனை மாமல்லபுரத்தில் தேர்களை கொண்டும் திருப்பாதிரி புலியூரில் உள்ள சிவபெருமான் கோவில் வேலைப்பாட்டிலிருந்து நாம் நன்கு அறிய முடிகிறது.

**துணை நூற் பட்டியல்**

1 பல்லவர் வரலாறு - டாக்டர் மா. இராச மாணிக்கனார்.
நாம் தமிழர் பதிப்பகம்.
முதற்பதிப்பு – ஜனவரி 2009

**2.** தொல் தமிழியச் சிந்து நாகரீகம்.
பி. இராமநாதன்.
தமிழ் மண் பதிப்பகம்
பதிப்பு – 2012.

**3.** கல்வெட்டுக்கலை
பொ. இராஜேந்திரன்.
சொ. சாந்தலிங்கம்
பாண்டியநாட்டு வரலாறு ஆய்வு மையம்.
மதுரை.
முதற்பதிப்பு – மார்ச் 2013.